# கலைஞரும் நானும்

87

**“கலைஞர் என்றால் முன்னோடி. அரசியலில், பொருளாதாரத்தில், சமூகநீதிச் சிந்தனைகளில் இந்தியாவுக்கே முன்னோடி. அதேநேரத்தில் தீராத எழுத்துக் காதலர், இதழாளர் என்கிற அடையாளங்களும் அவரை நேசிக்க வைக்கும்” என தனது அனுபவங்களைப் பகிர்கிறார், எழுத்தாளர் தமிழ்மகன்.**



## கதைகளைப் பாராட்டிய கலைஞர்!

தமிழ்மகன், எழுத்தாளர்

நான் இரண்டாம் வகுப்பு படிக்கும்போது என் தந்தையார் க.பாலகிருஷ்ணன் அவர்கள் மின்வாரியச் செயலகச் சங்கத்தின் தலைவராக இருந்தார். மின்வாரியச் செயலகச் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு விழாவை, கலைஞர் தலைமையில் நடத்தினார் என் தந்தை. அந்த விழாவை, முதல் வரிசையில் அமர்ந்து பார்க்கும் வாய்ப்பு, என் குடும்பத்தினருக்குக் கிடைத்தது. அதுதான் கலைஞரை நான் அவ்வளவு நெருக்கத்தில் முதன்முதலில் பார்த்தது.

இரண்டாவது முறை சென்னை பெரியார் திடலில் கலைஞரின் மகன் மு.க.அழகிரி அவர்களின் திருமண நாளில் கலைஞரைக் கண்டேன். அப்பாவின் கரம் பிடித்துக்கொண்டு அந்தத் திருமணத்திற்கு சென்றது, இன்றும் பசுமையாக நினைவில் இருக்கிறது. பெரியார் திடல் வாயிலிலேயே, நின்று கலைஞர் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

அப்பாவிடம் அவர், “எப்படி இருக்கிறீர்கள்?” என ஓரிரு வார்த்தைகள் பேசினார். பெரியவர்களின் காலில் விழுந்து வணங்க வேண்டும் என்பது என் தாத்தாவின் அறிவுரை. நான் கலைஞரின் காலில் விழுவதற்கு நெருங்கினேன். கலைஞர் பதறிப் போனார். நிலைமை உணர்ந்து அப்பா, என்னை இழுத்துப் பிடித்துக்கொண்டார்.

பெரியார், ராஜாஜி, காமராஜர், ஜெகஜீவன் ராம், எம்.ஆர்.ராதா, மணியம்மையார் உள்ளிட்ட தலைவர்களை, ஒருசேர அந்தத் திருமணத்தில் பார்த்தேன்.

### கவியரங்க காலம்

என் பள்ளிக் கூடப் பருவம் முடிந்த பின்பு, கலைஞரின் பேச்சைக் கேட்க கூட்டம் நடக்கிற இடங்களுக்கெல்லாம் நான் செல்ல ஆரம்பித்தேன். குறிப்பாக, கவியரங்கங்கள். ஏவி.எம். ராஜேஸ்வரி திருமண மண்டபம், கலைவாணர் அரங்கம், கல்லூரிகள் போன்றவற்றில் கவியரங்கம் நடக்கும். எண்பதுகளில் கலைஞர் தலைமையில் கவியரங்கம் என்றால், அதுவும் சென்னையில் என்றால், நான் அதைத் தவறவிட மாட்டேன்.

கவிஞர் அப்துல் ரகுமான், கவிஞர் மு.மேத்தா, கவிஞர் வைரமுத்து என நான் மிகவும் நேசித்த கவிஞர்கள் பலர் கவிதை பாடுவார்கள். ஒரு முறை கவியரங்கம் தொடங்கிய பிறகு, கவிஞர் அப்துல் ரகுமான் வந்தார். கலைஞர் ஒரு துண்டு சீட்டு எழுதி, ரகுமானிடம் கொடுத்தார். ‘காத்திருக்க வேண்டுமா?’ என்று அதிலே கலைஞர் எழுதி இருந்தார்.

அப்துல் ரகுமான் அவர்கள் மேடைக்கு வரும்போது, ‘ஏன் காத்திருக்கக் கூடாதா?’ என்று கவிதையைத் தொடங்கினார். அரங்கமே ஆடிப் போய்விட்டது. அடுத்த வரியில், ‘எமையெல்லாம் நீங்கள் காத்திருக்கக் கூடாதா?’ என்று முடித்தார். இந்த முறை கைதட்டலால் அரங்கம் ஆர்ப்பரித்தது. அது கவியரங்கங்களின் பொற்காலம்.

### அலுவலக வளாகம்

‘முரசொலி’ அலுவலகத்திலேயே தொடங்கப்பட்ட ‘தமிழன்’ வார இதழில், கவிஞர் அப்துல் ரகுமான் தலைமையில் பணியாற்றும் வாய்ப்பு அமைந்தது. கலைஞர் குறித்த செய்திகள், இதழை வாசித்து கலைஞர் சொல்லும் கருத்துகள் என அங்கு பணியாற்றிய நாட்களில், கலைஞர் குறித்து தினமும் புதுப்புதுத் தகவல்கள் வியப்பளிப்பவையாக இருக்கும்.

அலுவலகத்துக்கு கலைஞர் வருகையில், சில நாட்களில் ஓடிச் சென்று வரவேற்றுள்ளேன். அதில் அப்படி ஒரு சுகம், எனக்கு. காரில் ஏறியதும், அனைவருக்கும் கலைஞர் பதில் வணக்கம் சொல்லுவார். அது போதாதா?

நான் பணியாற்றிய நேரத்தில்தான் **‘தாய் காவியம்’** எழுதினார். அவர் கையெழுத்தில் காவியத்தைப் படித்த காலங்கள் மறக்க முடியாதவை.

அந்த நேரத்தில், நான் எழுதிய சிறுகதைத் தொகுப்பு ஒன்று வெளியானது. அவர் காரில் ஏற இருந்த நேரத்தில் ஓடிச் சென்று நூலைக் கொடுத்தேன். “நீங்கள் எழுதியதா?” என்றார்.

“ஆமாம் ஐயா”

“படித்து விட்டுச் சொல்கிறேன்...”- இது நான் எதிர்பார்க்காத பதில்.

அவருடைய இல்லத்தில் அவருடைய டேபிள் மீது என்னுடைய சிறுகதை தொகுதி இருந்தது. ஒவ்வொரு நாளும் அவரைச் சந்திக்க வருகிறவர்கள், அந்த இடத்தில் வைத்துத்தான் புகைப்படம் எடுப்பார்கள். மத்திய அமைச்சர்கள், பிரபலங்கள் பலரும் அவருடைய நூலகப் பின்னணியில் அமர்ந்து பேசுவது புகைப்படங்களாக முரசொலியில் வெளியாகும். அப்படி வெளிவந்த புகைப்படங்களில் அந்த டேபிள் மீது இருந்த என்னுடைய சிறுகதைத் தொகுதி இடம் பெற்றுக்கொண்டே இருந்தது.

**கலைஞரின் உயரம், பண்பு எல்லாம் எப்படி அமைந்தது, என யோசிக்கவே தேவையில்லை. அன்று நான் முழுமையாக உணர்ந்திருந்தேன்.**

சில நாட்கள் கழித்து, கலைஞரின் உதவியாளர் சண்முகநாதன் ஐயா அழைத்தார். “உங்கள் சிறுகதைகள் அருமையாக இருப்பதாக கலைஞர் தெரிவிக்கச் சொன்னார்” என்றார். எழுத்தாளர்களை எப்படி மதித்தார் என்பதற்கு, இவை உதாரணம்.

### நேர்காணல் கேள்விகள்

நடிகர் சரத்குமார், ராஜ்யசபா உறுப்பினராக கலைஞர் அவர்களால் நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட நேரம். அப்போது, சரத்குமார் அவர்களின் பள்ளிப் பருவப் புகைப்படம் ஒன்று கிடைத்தது. அதிலே சரத்குமார் என்.சி.சி மாணவராக, அன்றைய முதல்வர் கலைஞரால் டெல்லிக்கு அனுப்பி வைத்த படம் அது. அந்தப் புகைப்படத்தை குங்குமம் வார இதழில் வெளியிட்டு இவர் யார் எனக் கண்டுபிடிப்பவர்களுக்குப் பரிசு என்று அறிவித்தோம். அந்தப் போட்டியில் வெற்றிபெற்ற இரண்டு பேருக்கு சரத்குமார் அவர்கள், தலா பத்தாயிரம் பரிசளித்து மகிழ்ந்தார். பரிசு பெற்றவர்கள் கலைஞரைச் சந்தித்து, புகைப்படம் எடுத்துக் கொள்ள விரும்பினார்கள்.

‘குங்குமம்’ இதழின் அந்த வார இதழுக்கு நான் பொறுப்பாசிரியர் என்பதால், கலைஞர் அவர்களைச் சந்தித்து, குங்குமத்தில் அறிவித்த போட்டி, பரிசளிப்பு ஆகியவற்றை விளக்கியதுடன், இப்போது அவரிடம் புகைப்படம் எடுத்துக் கொள்ள விரும்புவது என அனைத்தையும் எடுத்துச் சொன்னேன். அவர் அனுமதித்ததும், அந்த இருவரையும் அழைத்துச் சென்று கலைஞருடன் புகைப்படம் எடுத்தேன்.

குங்குமம் இதழுக்காக கலைஞரின் நேர்காணலைத் தொகுக்கும் வாய்ப்பு ஒருமுறை அமைந்தது. கலைஞரை கவிஞர் வாலி அவர்கள் பேட்டி எடுப்பது, அதை நான் தொகுத்து எழுதுவது என்கிற அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

குங்குமம் சிறப்பாசிரியர் ராவ் கேட்டுக் கொண்டபடி, கலைஞரிடம் கேட்கவேண்டிய கேள்விகளைத் தயாரித்து, கவிஞர் வாலி அவர்களிடம் அளித்தேன். அந்தக் கேள்விகளை வாலி அவர்கள் சிலாகித்துக் கேட்க, கலைஞர் அவர்கள் பெருமிதமாக பதில் சொல்ல, அந்தப் பேட்டி இரண்டு வாரங்களுக்கு வெளியானது. அந்த நேர்காணலுக்குச் சென்ற அன்றுதான் அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டேன்.

### ஒரே ஒரு ‘சரி’

அப்போது குங்குமம் வார இதழை நான்கு பொறுப்பு ஆசிரியர்கள் கவனித்து வந்தோம். ஒவ்வொரு வாரமும் ஒரு பொறுப்பாசிரியர் இதழுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வோம்.

கலைஞர் அவர்களின் தமக்கையார் இறந்த செய்தி குங்குமத்தில் இடம்பெறவில்லை. அந்த வார இதழுக்கு பொறுப்பு நான். கலைஞர் மிகவும் கோபமாக இருக்கிறார். உங்கள் அலைபேசி எண்ணைக் கேட்டு வாங்கி இருக்கிறார். இப்போது பேசுவார் என்று என்னை அச்சுறுத்தி வைத்திருந்தார்கள். வேலையை விட்டு நீக்குவதற்கும் வாய்ப்புள்ளது என்றும் நண்பர்கள் கூறினர்.

கலைஞர் நேரடியாக என்னுடைய செல்போனுக்கு போன் செய்து, “என்னுடைய அக்கா இறந்து விட்டார் என்பது உங்களுக்குத் தெரியாதா?” என்று கேட்டார்.

“தெரியும் ஐயா” என்றேன்.

“அந்தச் செய்தி பல இதழ்களில் வெளி வந்திருக்கிறது. குங்குமம் இதழில் மட்டும் வெளியாகவில்லை. ஏன்?” என்றார்.

‘‘பல லட்சம் பிரதிகள் அச்சடிக்க வேண்டி இருப்பதால் இதழ் பணிகளை முன்னதாகவே முடித்து விடுகிறோம் ஐயா. மரணச் செய்தி கிடைப்பதற்கு முன்பே, நாங்கள் இதழை முடித்து விட்டோம்” என்று கூறினேன்.

‘‘முன்னதாகவேவா?’’ என்று மட்டும் மறுபடி கேட்டார்.

“ஆமாம் ஐயா.”

“சரி” என்று போனை வைத்துவிட்டார்.

இதழாளர் சிரமம் புரிந்தவராக, பத்திரிகையாளராகவும் கலைஞரைப் பார்க்கிறேன்.

கலைஞரின் உயரம், பண்பு எல்லாம் எப்படி அமைந்தது, என யோசிக்கவே தேவையில்லை. அன்று நான் முழுமையாக உணர்ந்திருந்தேன்.

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

....பகிர்வார்கள்

## உறுதிமொழிக்கு எதிராக ஒரு நிகழ்வு!

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியின் வீட்டில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி விழாவில், பிரதமர் மோடி பங்கேற்றது வீடியோவாகவும் சமூக வலைதளங்களில் பரப்பப்பட்டது. அந்த சம்பவத்தை, எதிர்க்கட்சிகள் விமர்சித்த நிலையில், அது குறித்து, மூத்த வழக்கறிஞர் இந்திரா ஜெய்சிங், எழுதியுள்ள கட்டுரையொன்றில் ஆறு கேள்விகளை எழுப்பியுள்ளார். அந்தக் கட்டுரை சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகிறது.

யாருடைய அழைப்பின் பேரில், பிரதமர் தலைமை நீதிபதியின் இல்லத்திற்குச் சென்றார்?

குடியரசுத் தலைவர் உள்ளிட்ட மற்ற அரசியலமைப்பு நிர்வாகிகள் ஏன் வரவில்லை? அவர்கள் அழைக்கப்பட்டார்களா?

தலைமை நீதிபதியின் இரண்டு வருட பதவிக் காலத்தில், சமூக மற்றும்/அல்லது மத நிகழ்ச்சிகளுக்காக அவர் எத்தனை முறை பிரதமரைத் தனிப்பட்ட முறையில் சந்தித்துள்ளார்?

தனிப்பட்ட அந்த மதச் சடங்கு ஏன் புகைப்படம் எடுப்பதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்தப்பட்டது?

மகாராஷ்டிரா மாநிலத் தேர்தல் வரவிருக்கும் நிலையில், மகாராஷ்டிர சின்னமான தொப்பி அணிவதற்குத் தலைமை நீதிபதி விட்டுக் கொடுத்தாரா?

இந்து மத சின்னங்கள், பாடல்கள் மற்றும் சடங்குகளின் இந்த வெளிப்படையான காட்சிப்படுத்துதலைக் கருத்தில் கொண்டு பார்த்தால், இந்து அல்லாத வழக்காடிகள் தலைமை நீதிபதியிடமிருந்து இனி, பாரபட்சமற்ற நீதியை எதிர்பார்க்க முடியுமா?

இந்த ஆறு கேள்விகளுக்கும் பிரதமரும் தலைமை நீதிபதியும் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் என்றும் இந்திரா ஜெய்சிங் கேள்வி எழுப்பி இருக்கிறார்.

## ஃப்ளாஷ்பேக்



த.ராஜாராமன்



### தளபதி தந்த ‘நெஞ்சுக்கு நீதி’

1998-ஆம் ஆண்டு இன்றைய கழகத் தலைவர் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்கள் சென்னை மாநகராட்சி மேயராக இருந்தார். அப்போது, கேளம்பாக்கம் படூரில் ஜூன் மாதம் 20, 21 ஆகிய தேதிகளில் இளைஞர் அணிப் பயிற்சிப் பாசறைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தின் நிறைவில் பேச்சுப் போட்டி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில், நான் பங்கேற்று, சிறப்பாக உரையாற்றியதால் தளபதி அவர்களிடமிருந்து தலைவர் கலைஞரின் **‘நெஞ்சுக்கு நீதி’** புத்தகத் தொகுப்பைப் பரிசாகப் பெற்றேன். எனக்குச் சால்வை அணிவித்தும் வாழ்த்தினார்.

**– த.ராஜாராமன், பி.ஏ.பி.எல்,**
**கழகப் பிரதிநிதி,**
**காஞ்சிபுரம் வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### கழகத்தின் கோட்பாடு!

1949-ஆம் ஆண்டு, சென்னை ராபின்சன் பூங்காவில் நடைபெற்ற கழகத்தின் முதல் பொதுக்கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா ஒன்றரை மணி நேரம் உரையாற்றினார். பேச்சின் சாராம்சம் இதுதான். ‘‘திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளின் மீதுதான், திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. அடிப்படைக் கொள்கைகளில் கருத்து மோதல் எதுவும் கிடையாது. சமுதாயத் துறையிலே சீர்திருத்தம், பொருளாதாரத் துறையிலே சமதர்மக் குறிக்கோள், அரசியலில் வடநாட்டு ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை ஆகியக் கொள்கைகள்தாம் தி.மு.கழகத்தின் கோட்பாடுகளாகும்’’.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

601

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131